**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාව**

**වෙත යොමු කරන ලද**

**අපරාධ නඩු විධාන සංග්‍රහය(සංශෝධන) පනත් කෙටුම්පත**

**සම්බන්ධයෙන්**

**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ වාර්තාව**

**පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ**

**රාජ්‍ය පාලනය, යුක්තිය සහ සිවිල් ආරක්ෂණය පිළිබඳ ආංශික අධීක්ෂණ කාරක සභාවේ සභාපති**

**ගරු (වෛද්‍ය) නජිත් ඉන්දික මහතා, පා.ම. විසිනි**

**2025 මැයි මස 22 වැනි බ්‍රහස්පතින්දා**

**-------------------------------------------------------------**

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு**

**ஆற்றுப்படுத்தப்பட்ட**

**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம்**

**மீதான**

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின்**

**அறிக்கை**

**ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர்**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க, பா.உ. அவர்களால்**

**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.**

**2025 மே 22, வியாழக்கிழமை.**

**-------------------------------------------------------------**

**Report of the**
**Sectoral Oversight Committee on Governance, Justice and Civil Protection**
**on**
**Code of Criminal Procedure (Amendment) bill**
**referred to Sectoral Oversight Committee on**

**Governance, Justice and Civil Protection**

**Presented to Parliament by**

**Hon. (Dr.) Najith Indika,M.P.**

**Chair of the Sectoral Oversight Committee on**
**Governance, Justice and Civil Protection**

**Thursday, 22 May 2025**

## குழுவின் அறிக்கை

2025 மே மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பின்வரும் சட்டமூலம் கவனத்தில் கொள்ளப்பட்டது.

- குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை(திருத்தச்) சட்டமூலம்
  (இது, 2025 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.)

**<u>கலந்துகொண்ட குழுவின் கௌரவ உறுப்பினர்கள்:</u>**
கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க, பா.உ. (தவிசாளர்)
கௌரவ எம்.கே.எம். அஸ்லம், பா.உ.
கௌரவ (சட்டத்தரணி) திருமதி துஷாரி ஜயசிங்க, பா.உ.
கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்க, பா.உ.
கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.
கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார, பா.உ.

**<u>கலந்துகொண்ட குழுவின் அங்கத்தவர்கள் அல்லாத கௌரவ உறுப்பினர்கள் (குழுவின் கௌரவ தவிசாளரின் அனுமதியின் பேரில்)</u>**
கௌரவ அஜித் பீ. பெரேரா, பா.உ.
கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா, பா.உ.
கௌரவ (சட்டத்தரணி) திருமதி அனுஸ்கா திலகரத்ன, பா.உ.
கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத், பா,உ.

**<u>குழுவின் செயலாளர்</u>**
திருமதி சூலா ஹேரத், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)

**<u>கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள்</u>**
**<u>நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு</u>**
திருமதி. பியுமந்தி பீரிஸ், மேலதிக செயலாளர் (சட்டம்)
திருமதி. ஜலாஷி லொக்குநாரங்கொட, உதவிச் செயலாளர் (சட்டம்)
திரு.பீ.எம்.யூ.ஜீ.ஏ.கே.பஸ்நாயக்க, சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிர்வாகம்)

**<u>சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம்</u>**
சட்டத்தரணி சுதர்ஷன த சில்வா, சிரேஷ்ட பிரதிச் சொலிசிட்டர் ஜெனரல்
கலாநிதி திருமதி அவந்தி பெரேரா, பிரதிச் சொலிசிட்டர் ஜெனரல்

**<u>சட்ட வரைஞர் திணைக்களம்</u>**
திருமதி டீ.எம்.கே.டீ.கே.திசாநாயக்க, உதவிச் சட்ட வரைஞர்

**<u>அறிமுகம்</u>**

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களானவை இலங்கையின் குற்றவியல் நீதி முறைமைக்கு தாக்கம் செலுத்தும் சமகாலப் பிரச்சனைகளுக்கு காலப் பொருத்தமான தீர்வாகக் கருதப்படலாம் என்பதோடு இந்தத் திருத்தங்கள், குறிப்பாக கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போதும், நீதிமன்றங்களுக்குள் துரதிர்ஷ்டவசமாக உயிரிழப்புகள் ஏற்படுதல் உள்ளிட்ட வன்முறை செயற்பாடுகளைத் தடுப்பதற்கும், குற்றவியல் நீதிமன்றங்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும், அனைத்துத் தரப்பினரின் நன்மைக்காக சமகால மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கும் முன்மொழிகின்றன.

முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மூலம் சந்தேகநபர் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவரை நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க நீதவான் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் வழங்குதல், நீதிமன்ற புலனாய்வு அல்லது வழக்கு விசாரணை நடைபெறும் வேளையில், சமகால ஒலி-ஒளித் தொடர்பு மூலம் சாட்சிகளிடமிருந்து தொலை தூர சாட்சியங்களைப் பதிவு செய்ய நீதவான் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் வழங்குதல், அரச துறை நிபுணர்களுக்காக அதாவது இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் மற்றும் சட்ட மருத்துவப் பிரிவின் நிபுணர்களுக்கு, மின்னஞ்சல் மூலம் அழைப்பாணைகளை அனுப்புமாறு உரிய சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் பதிவாளருக்கு உத்தரவிட நீதவான் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் வழங்குதல், அத்துடன் வழக்குடன் தொடர்புடைய

தரப்பினர்கள் குறித்த நிபுணர் தனிப்பட்ட முறையில் ஆஜராக வேண்டும் என வலியுறுத்தாத பட்சத்தில் மற்றும் தலைமை நீதிபதி அதனைப் பொருத்தமானதாகக் கருதும் பட்சத்தில், குறித்த நிபுணர்களின் சாட்சியத்தை அழைக்காமலேயே, மின்னஞ்சல் மூலம் நீதிமன்றத்திற்குக் கிடைத்த நிபுணர் அறிக்கைகளை ஏற்கத்தக்க சான்றாக ஏற்றுக்கொள்ள முடியும் என அனுமானிப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை சட்டத்தில் அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளன.

**<u>குழுவின் அவதானிப்புகள்</u>**

1. சமகால ஒலி-ஒளித் தொடர்பு மூலம், அழைப்பாணை வழங்கப்பட்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, முன்மொழியப்பட்ட திருத்தத்தின் மூலம் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சாட்சிகளுக்கு மட்டுமே பொருந்தும்.
2. மேலும், இந்தச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின்படி, வெளிநாடுகளில் உள்ள நிபுணர் சாட்சிகளுக்கு அனுப்பப்படும் மின்னஞ்சல் செய்தியில், அழைப்பாணை கிடைத்ததற்கான உறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டும் என்பதோடு, ஒவ்வொரு தரப்பினருக்கும் அழைப்பாணை கிடைத்ததை உறுதிப்படுத்திய பின்னரே நீதிபதி சாட்சிய விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்பது.
3. இதன் மூலம் வெளிநாடுகளில் உள்ள சாட்சிகளிடமிருந்து சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது இலகுவாக்கப்படும் என்பதோடு, ஒரு விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்க விரும்பும் தரப்பினரிடமிருந்து சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும் என்பது.

இதற்கு மேலதிகமாக, குழுவில் கலந்துகொண்ட நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அதிகாரிகள், தங்களால் தொகுக்கப்பட்ட குழு நிலைப் பிரேரணைகளை குழுவிடம் சமர்ப்பித்ததோடு அப் பிரேரணைகள் தொடர்பாகவும் குழு தனது கவனத்தைச் செலுத்தி, அவை ஆக்கபூர்வமான மட்டத்தில் உள்ளதென இணக்கியது.

**<u>குழுவின் தீர்மானங்கள்</u>**

பரிசீலனை செய்ததன் பின்னர், குழுவானது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பில் இணக்கம் தெரிவித்ததுடன் அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட குழுவின் இவ்வறிக்கை, குழுவின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) நஜித் இந்திக்க அவர்களினால் 2025 மே மாதம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது.